முருகப்பெருமான் துணை

**மகான் ஐயடிகள் காடவர்கோன் நாயனார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

27.11.2021, சனிக்கிழமை

1. சித்தி அருளும் அரங்கா போற்றி
செகம் காக்கவந்த தேசிகா போற்றி
உத்தம மாந்தர்கள் நிறைந்த
உயர் உலகம் படைக்க வேண்டி
2. வேண்டியே அவதாரம் புரிந்த
வேலவனார் சக்தியே உன் பெருமைகூறி
கண்டுரைப்பேன் துல்லிய ஆசி
கணக்காய் பிலவ தேள் திங்கள்
3. திங்களிலே லாபதிகதி காரி வாரம்
(பிலவ வருடம் கார்த்திகை மாதம் 11ம் நாள், 27.11.2021 சனிக்கிழமை)
தேசிகனுக்கு ஐயடிகள் காடவர்கோன் யானும்
ஓங்கார உலகம் அமைய உரைப்பேன்
ஓங்கார ஞானி அரங்கன் காட்டும்
4. காட்டும் தரும வழிகளை
கலியுகமக்கள் உயர்வழியாக
வாட்டமற ஏற்றுத் தொடர
வணங்கி தொடர்ந்து வர
5. வருகவே மக்களினை பற்றி
வாட்டும் வினைகள் விலகி
தரும சிந்தை பெருகியே
தரணியை காக்கும் வண்ணம்
6. வண்ணமுடன் சக்தி மிக்கவர்களாக
வாழும் ஞானி வழிகாட்டலில்
எண்ணம் எல்லாம் தூய்மை கண்டு
எல்லா வகையும் தேற்றமாகி
7. ஆகியே அரங்கன் தேடும்
ஆற்றல் மிக்க ஞானிகளாகி
அகிலத்தை மாற்றும் வண்ணம்
அற்புதம் படைக்க தேறுவர்
8. தேறவே சன்மார்க்க நெறி
தெய்வ நெறியாக வளர்ந்து
கூறவே மக்களை அனுகி
குறையிலா சக்தியாக்கி இனிதே
9. இனிதே உலகம் தன்னை
இணையிலா ஞான சக்தியாக்கிட
கனிவேலன் அருள் துணைகொண்ட
காப்புமிக்க ஞானபூமியாக மாற்றி

10. மாற்றியே அரங்கன் மார்க்கம்
மண்ணுலகில் ஞான ஆட்சி
ஆற்றல்பட அரங்கன் சக்தியாக
அறிவிப்பேன் தொண்டர் படைமூலம்

11. மூலமதில் இந்த மாற்றம்
முழுமையான ஞான சித்தர்
காலமாக ஞானிகள் ஆட்சியாக
கலியுகம் மாறி இனிதேகாணும்
துல்லிய ஆசி மற்றே

–சுபம்–